(இ) ஆம் எனில், எப்போது முதல் நடைமுறைக்கு வரும் ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

*350 வினா—திரு. த. சோனையா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட சிறிய நீர்ப்பாசன (Minor Irrigation Tanks) வரத்துக் கால்வாய்களை மராமத்து செய்யும் உத்தேசம் அரசிடம் உண்டா ?

(இ) ஆம் எனில், எந்த மானிய நிதியிலிருந்து செய்யப்படும்?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) & (இ) ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட சிறிய நீர்ப்பாசன வரத்துக் கால்வாய்கள் ஊராட்சி ஒன்றியங்களினால், அரசிடமிருந்து பெறப்படும் சிறுபாசன மானிய நிதியிலிருந்து மராமத்து செய்யப்படுகின்றன. ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட சிறுபாசன நீர்நிலைகளைத் தன் வசம் எடுத்து பழுது பார்க்கும் வேலை சம்பந்தமாக குறிப்பேதும் அரசிடம் இல்லை.

திரு. த. சோனையா : சில கண்மாய்கள் பொதுப்பணித் துறையிலிருந்து மராமத்து செய்யப்படுகின்றன. சில ஊராட்சி ஒன்றியங்களினால் செய்யப்படுகின்றன. சில கண்மாய்கள் ஆர்.டி.ஓ. கண்டிரோலில் செய்யப்படுகின்றன. இப்படி சிறிய கண்மாய்கள் பல துறைகளினால் மராமத்து செய்யப்படுவதினால், கால்வாய் வெட்டும் வேலை மிகவும் தாமதப்படுகிறது. யார் செய்கின்றது என்ற பிரச்னையும் வந்து விடுகிறது. ஆகவே, எல்லா கண்மாய்களையும் ஒரே இலாகாவின் கீழ் வைத்து ஒரே மாதிரியாகச் செய்வதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : இந்த யோசனையைப் பரிசீலனை செய்யலாம்.

THIRU B. VENKATASAMI : Sir, for the time being the Minor Irrigation Projects in Panchayat Unions are maintained according to the cycle system adopted by the Government. May I know, Sir, whether there is any proposal to strengthen the

1973 நவம்பர் 23]

bunds of the tanks and also to desilt the tanks, because there are many tanks which have to be strengthened? If the tanks are not desilted, the water storage capacity of the tanks will be reduced. May I know whether there is any concrete proposal with the Government in this regard?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : அப்படி கண்மாய்களின் கரைகளைப் பலப்படுத்துவதற்கும், தூர் வாருவதற்கும் வேண்டிய நடவடிக்கை அரசாங்கத்தின் பரிசீலனையில் இருந்து கொண்டு வருகிறது. சம்பந்தப்பட்ட இலாக்காக்களுக்கு அதற்கு முக்கியத்துவம் அளிக்கவேண்டும் என்று தாக்கீது அனுப்பப்பட்டிருக்கிறது.

திரு. சோ. அழகர்சாமி : ஊராட்சி நிர்வாகத்தினிடம் ஒப்படைக்கப்பட்ட கண்மாய்களை மராமத்து செய்வதற்குப் போதுமான நிதி வசதி இல்லை. அதனால் அவைகள் ஊராட்சி மன்றங்களினால் செப்பனிடப்படாமலே இருக்கின்றன. இத்துணை ஏக்கர் ஆயக்கட்டு உள்ள கண்மாய்களைத்தான் பொதுப்பணித் துறையின்கீழ் கொண்டு வரவேண்டும் என்ற ஏற்பாடு இருக்கிறது. இன்னும் சில இடங்களில் பல்வேறு கால்வாய்களை சீரமைப்பது குடிமராமத்தின்கீழ் கொண்டு வரப்பட்டிருக்கிறது. அந்தப் பழக்கம் பழைய காலத்திலிருந்து தொடர்ந்து வருகிறது. குடிமக்களினால் அவைகளைப் பழுது பார்க்க முடியவில்லை. ஆகவே, அவைகளும் சீர்கெட்டுப்போன நிலைமையில் இருக்கின்றன. எல்லாவற்றையும் பொதுப் பணித் துறையிலேயே மராமத்து செய்யவேண்டும் என்று உத்தரவிட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தற்சமயம் நிர்வாகச் சீர்திருத்தக் குழு சிபார்சின்படி 100 ஏக்கர்களுக்கு மேற்பட்டு ஆயக்கட்டுள்ள ஏரிகள் பொதுப்பணித் துறையின் கீழ் மாற்றப்படலாமா என்ற யோசனையை பரிசீலனை செய்து கொண்டு வருகிறோம். அதைப்போலவே வரத்து வாய்க்கால், கால்வாய்களை ஆழப்படுத்தி, தூர் வாருவதற்கு அதிகத் தொகை ஒதுக்கவேண்டும் என்று அரசு தக்க நடவடிக்கை எடுத்திருக்கிறது.

THIRU K. S. KOTHANDARAMIAH : There is a great overlap of works. Some works are done by the Panchayat Unions and also Public Works Department. It is a waste of time and waste of money also. The overlap should be avoided. It would be better if

the work is entrusted to the Public Works Department. Will the Hon. Minister for Local Administration be pleased to see that all these works are entrusted to the Public Works Department rather than to the Panchayat Unions in the interest of efficient work?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவரவர்களே, சில பெரிய ஏரிகளை பொதுப்பணித் துறையினர் மராமத்து செய்கிறார்கள். பாசன வசதி உள்ள ஆயக்கட்டு ஏரிகளை வருவாய்த் துறையினரும் மற்றும் சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களை ஊராட்சி ஒன்றியத்தினரும் மராமத்து செய்து வருகிறார்கள். இப்படி இருந்தாலும், பொது முக்கியத்துவத்தைக் கருதி, சில பாசனத் திட்டங்களை பொதுப்பணித் துறைக்கு மாற்ற வேண்டியிருந்தாலும் அவ்வாறு மாற்றுவதற்கு அரசாங்கம் யோசனை செய்துகொண்டிருக்கிறது.

வராக நதியின் குறுக்கே பாலம்

*** 351 வினா—திரு. நா. வெ குருசாமி:** மாண்புமிகு உள்ளாட்சி துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டம், குள்ளப்புரத்தில் வராக நதியின் குறுக்கே ஓர் பாலம் கட்டும் திட்டம் எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: இவ்வேலை ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் பரிசீலிக்கப்பட வேண்டியதாக உள்ளது.

திரு நா. வெ. குருசாமி: தலைவரவர்களே, இந்தப் பாலமானது கட்டப்பட்டால் ஆண்டிப்பட்டிப் பகுதியிலிருந்தும், வரிசநாடு மலைப்பகுதியிலிருந்தும் திண்டுக்கல் செல்லக்கூடிய மக்களுக்கு சுமார் 20 மைல் குறையும். ஆகவே, இந்தப் பாலத்தை விரைவில் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவரவர்களே, இந்தப் பாலம் கட்டவேண்டிய இடம் வராக நதியில் மருதப்பட்டிக்கும் ஆண்டிப்பட்டிக்கும் இடையே கட்டப்பட வேண்டியது என்று கருதுகிறேன். அதற்குத் தோராயமாக ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டதில் 5 லட்சம் ரூபாய் செலவாகும் என்று பொறியாளர்கள் அறிவித்திருக்கிறார்கள். அதை இந்த வேலைத் திட்டத்தில்